# ஹார்ட் மானிட்டரை நோயாளி சுயமாகப் பொருத்திக் கொள்வதற்கான வழிகாட்டி

**உதவிக்கு 0345 6080542 ஐ அழைக்கவும் திங்கள் - வெள்ளி காலை 9:00 - மாலை 5:00**
**மானிட்டரை கீழ்க்கண்ட நேரத்துக்கு அணியுங்கள்:**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 24 மணி நேரங்கள் | | 48 மணி நேரங்கள் | | 72 மணி நேரங்கள் | | 7 நாட்கள் |

இந்த மானிட்டர் உங்கள் இதயத்தின் தொடர்ச்சியான பதிவை எடுக்கும், இதனால் உங்களுக்கு அறிகுறிகளை உண்டாக்குவது எது என்று உங்கள் மருத்துவர் விரைவாகவும் துல்லியமாகவும் மருத்துவ ஆய்வு செய்ய முடியும். மானிட்டர் வீட்டிலேயே எளிதில் சுயமாகப் பொருத்தக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. பொருத்தியுள்ள காலத்தில் தயவுசெய்து உங்கள் சாதாரண செயல்பாடுகளைச் செய்யுங்கள்; இதன் பொருள் என்னவென்றால் நீங்கள் அதை கழற்றாமல் உடற்பயிற்சி செய்யலாம் மற்றும் ஷவரில் குளிக்கலாம் (தயவுசெய்து நீந்தவோ மூழ்கிக் குளிக்கவோ வேண்டாம்).
முக்கியம்: தயவுசெய்து காலை 9:00 - மாலை 5:00 அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளில் பொருத்தவும்

## 1 வீடியோவைப் பார்க்கவும் & பயன்பாட்டைப் பதிவிறக்கவும்

மானிட்டரைப் பொருத்துவதற்கு முன்பு, முடியுமானால், எங்கள் சிறிய வீடியோவைப் பாருங்கள்: www.ecg-od.com/fitting

இந்த வழிமுறைகளைக் கவனமாகப் படியுங்கள். உங்களால் முடிந்தால், QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் டயரி பயன்பாட்டைப் பதிவிறக்கவும் அல்லது ஈ.சி.ஜி-ஓ.டி (ECG-OD) டயரிக்கான ஆப்/ப்ளே ஸ்டோரில் தேடுங்கள்.

உங்கள் அறிகுறிகளை உங்கள் ஸ்மார்ட்போனில் பதிவு செய்யுங்கள். அதற்கு மாற்றாக, தரப்பட்டுள்ள காகித டயரியைப் பயன்படுத்தவும்.

## 2 பெட்டியில் உள்ள பொருட்கள்

கீழ்க்கண்ட பொருட்கள் உங்களிடம் இருக்கிறதா என்று சரிபார்க்கவும்:

- ஹார்ட் மானிட்டர் (கேபிள் உட்பட)
- ஈ.சி.ஜி எலெக்ட்ரோட்கள் (உபரியாக ஒட்டும் பட்டைகள்)
- ஆல்கஹால் வைப் (சருமத்தை சுத்தம் செய்ய)
- ரேஸர் (முடியை அகற்ற)
- காகித டயரி (அறிகுறிகளைப் பதிவு செய்ய)
- திருப்பி அனுப்புவதற்கான உறை




## 3 தோலை தயார் செய்தல்

முக்கியம்: மானிட்டர் பொருத்தப்படும் இடத்தில் ஏதேனும் மாய்ஸ்சரைசர், எண்ணெய் அல்லது அழகுப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டிருந்தால், இந்த தயாரிப்புகளை அகற்ற தயவுசெய்து அடுத்த தோல் தயாரிப்பு நிலைகளுக்கு முன்னர் சோப்பு மற்றும் தண்ணீரைப் பயன்படுத்தவும் (அதன் பின்னர் நன்கு உலர்த்தவும்).



### தோலை தயார் செய்யும் செயல்முறை:

1. தயார் செய்ய வேண்டிய பகுதிகளை அடையாளம் காணவும் (இடது பக்கம் பார்க்கவும்)
2. ஏதேனும் முடி இருந்தால் ரேஸரைப் பயன்படுத்தி அகற்றவும்
3. ஆல்கஹால் வைப்-ஐப் பயன்படுத்தி அந்த பகுதியைத் தீவிரமாக சுத்தம் செய்யுங்கள்
4. எந்தவொரு துப்புரவு செய்யும் திரவத்தையும் 2 முழு நிமிடங்களுக்குள் இயற்கையாக ஆவியாக அனுமதிக்கும்படி சருமத்தை உலர வைக்கவும்

## 4 ஹார்ட் மானிட்டரை இணைப்பது

- எலக்ட்ரோட்களிலிருந்து பின்புறத்தை கவனமாக அகற்றி, வலதுபுறத்தில் உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி பொருத்தவும்
- தோல் தொடர்பை உறுதிப்படுத்த, எலக்ட்ரோட் விளிம்புகளை மென்மையாக்குங்கள், ஆனால் மையங்களில் அழுத்துவதைத் தவிர்க்கவும்



## 5 மானிட்டரைத் துவங்குதல்

- தோலில் தொடர்பு ஏற்பட்டவுடன் சாதனம் தன்னியக்கமாகத் தொடங்கும். அது வெற்றிகரமானால், ஒவ்வொரு 5 வினாடிக்கும் ஒரு பச்சை விளக்கு ஒளிருவதை (இதய ஐகானில்) நீங்கள் பார்க்க வேண்டும். ஒளிருவது மங்கலாக இருக்கிறது, எனவே நீங்கள் வெளிச்சமான இடத்தில் இல்லை என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்
- ஒளி தெரியவில்லை என்றால், 0345 6080542 எண்ணில் ஹெல்ப்லைனை அழைக்கவும் (திங்கள்-வெள்ளி காலை 9:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை திறந்திருக்கும்)




## 6 எலக்ட்ரோட்களை மாற்றுவது

ஒரு எலக்ட்ரோட் தளர்வாக வந்தால், கொடுக்கப்பட்ட மாற்று பாகங்களைப் பயன்படுத்தி அதை மாற்றவும். எலக்ட்ரோட்கள் எளிய அழுத்தக்கூடிய குமிழ்களைப் பயன்படுத்தி கேபிளுடன் இணைக்கப்படுகின்றன. உங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய தோல் எதிர்வினை இருந்தால், மானிட்டர் மற்றும் எலக்ட்ரோட்களை அகற்றி விட்டு ஹெல்ப்லைனை அழைக்கவும்.

## 7 உங்கள் அறிகுறிகளைப் பதிவு செய்யவும்

ஏதேனும் குறிப்பிடத்தக்க அறிகுறிகளும் அவற்றின் நேரங்களும் பதிவு செய்யப்பட்டால் அது உங்கள் நோயறிதலுக்கு உதவும். ஸ்மார்ட்போன் ஆப் அல்லது அச்சிடப்பட்ட டயரியைப் பயன்படுத்தவும்.




## 8 பதிவு செய்வதை முடித்தல்

வெறுமனே மானிட்டர் மற்றும் கேபிளை அகற்றவும். தோலில் இருந்து இரண்டு எலக்ட்ரோட்களை மெதுவாக அகற்றி அப்புறப்படுத்துங்கள் (ஆனால் கேபிள் அல்லது சாதனத்தை அல்ல).

## 9 அஞ்சல் அலுவலகம் வழியாக மட்டுமே மானிட்டரை திருப்பி அனுப்ப வேண்டும்

உறையை உங்கள் உள்ளூர் தபால் நிலையத்திற்கு எடுத்துச் சென்று அதைக் கவுண்டரில் ஒப்படைக்கவும் - டெலிவரிக்கான செலவுகள் எதுவும் இல்லை மற்றும் சேவை இலவசமாகும்.

திருப்பி அனுப்புவது ஒரு கண்காணிக்கப்பட்ட சேவை வழியே செய்யப்படுகிறது, எனவே ஒரு தபால் பெட்டியைப் பயன்படுத்த வேண்டாம்.

கொடுக்கப்பட்ட உறைகளில் பின்வருபவை திருப்பி அனுப்பப்படுவதை உறுதி செய்யவும்:

1. நோயாளி காகித டயரி (பயன்படுத்தியிருந்தால்)
2. ஹோல்டர் மானிட்டர் (கேபிள் உட்பட)

